| | | | | |
|---|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.18/2022 | | பி. சா .1 | தேதி.19.04.2023 | |
| பெயர் | திரு.ஜி.வெங்கடாசலம் | | வயது | 70 |
| த/பெ. | திரு.கோவிந்தப்ப கவுடர் | | முகவரி | 88, சத்தி மெயின் ரோடு, தென்கிழக்கு வீதி , |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வா சா ஆ 6 ஆவணத்திலுள்ள முகவரி சரியானதுதான். அந்த முகவரியில் தான் அவருக்கு இறுதி சடங்கு செய்தார்கள். வா சா ஆ 7 ஆவணத்தில் உள்ள முகவரியில்தான் வாரிசுகள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் கதவு எண் 88, முதல் தெரு வ ஊ சி தெரு சிறுமுகையில் 1989 லிருந்து குடியிருந்து வருகிறேன். எனக்கும் என் உடன் பிறந்தவர்களுக்குமிடையே சுமுகமான உறவு இருந்துள்ளதென்றால் சரிதான். எல்லோரும் சிறுமுகை வ ஊ சி நகர் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். என் தாயார் நஞ்சம்மாள் கதவு எண்.11/19 ல் சிறுமுகையில் இறந்தார். என் தாயாரின் இறுதி சடங்கில் எல்லோரும் கலந்து கொண்டார்கள் என்றால் என் தம்பி குடும்பம் வரவில்லை. என் அக்கா குடும்பம் வந்தார்கள். வாதிகள் இறுதி சடங்கிற்கு வரவில்லை.

2. 2ம் பிரதிவாதி குடும்பத்தார் இறுதி சடங்கிற்கு வந்தார்கள். என் தாயார் நஞ்சம்மாள் இறப்பதற்கு முன்பாக அவரது கால் முறிந்து விட்டதென்றால் சரிதான். என் தாயார் 2ம் பிரதிவாதி ருக்மணி வீட்டில் உடுமலைப்பேட்டையில் தங்கி சிகிச்சை பெற்றாரென்றால் உண்மையில்லை. என் வீட்டிலிருந்துதான் சிகிச்சை பெற்றார். வாதிகளும் ருக்மணியும் தான் அவருக்காக செலவுசெய்தார்கள் என்றால் சரியல்ல. என் அம்மா இறந்ததால் துக்கம் தாங்காமல் 2-1/2 மாதத்தில் 3ம்வாதியின் தந்தை சதாசிவம் இறந்து விட்டாரென்றால் சரியல்ல. வாதிகள்தான் வழக்குச் சொத்தில் இன்றைய தேதிவரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் எஸ் எஸ் எல் சி படித்துள்ளேன்.

3. நான் படிப்பை முடித்தபிறகு வெளி மாநிலத்திற்கு வேலைக்கு போய்விட்டேன் என்றால் சௌத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனியின் கான்ட்ராக்ட் எங்கெங்கு நடக்கிறதோ அங்கெல்லாம் வேலைக்கு போய் வருவேன். நான் சௌத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனிக்காக வெளிமாநிலங்களுக்கு வேலைக்கு சென்றுள்ளேன். ஹரீஸ்

இன்ஜினியரிங் பெயரில் ஒப்பந்ததாரராக இருந்தேன். நான் எந்த சமயத்திலும் வழக்குச் சொத்தில் குடியிருந்ததே கிடையாதென்றால் சரியல்ல. 1989 லிருந்து சிறுமுகை வ ஊ சி நகரில்தர்ன நான் குடியிருந்து வந்தேன் என்றும் வழக்கச் சொத்தில் ஒருபோதும் நான் அனுபவத்தில் இருந்ததில்லையென்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்குச் சொத்தில் குடியிருந்ததற்கு ஆதாரம் ஏதேனும் உண்டா என்றால் நான் குடியிருந்த வீட்டிற்கும் வழக்குச் சொத்திற்கும் 100 அடி தூரம்தான் இருக்கும்.

4. வழக்குச் சொத்திற்கு நான் எப்போதும் போய் வந்ததில்லையென்றும் வழக்கிற்காக போய் வந்ததாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நானும் வாதிகளும் சுமுகமான உறவில் இருந்த சமயம் வாதிகளின் அனைத்து ஆவணங்களையும் நான் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் இறந்து போன கோவிந்தப்ப கவுடரும் , நஞ்சம்மாளும் 1962 லிருந்து இறக்கும்வரை குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். கோவிந்தப்ப கவுடருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் ரங்கம்மாள். இரண்டாவது மனைவி பெயர் நஞ்சம்மாள். முதல் மனைவிக்கு 1 ஆணும் ஒரு பெண்ணும் உள்ளார்கள். இரண்டாம் மனைவிக்கு நான் , என் தம்பியும் அக்கா ருக்மணியும் பிள்ளைகள். முதல் மனைவி ரங்கம்மாளும் இறக்கும்வரை வழக்குச் சொத்தில்தான் இருந்தார்களென்றால் இரண்டாவது திருமணம் முடிந்தவுடன் அவர் அங்கு இல்லை.

5. வழக்குச் சொத்தில் இரண்டு வீடுகள் உள்ளது. இரண்டு மனைவி இருந்ததால் இரண்டு வீடுகள் கட்டினார் என்றால் சரியல்ல. எனது அப்பா கோவிந்தப்ப கவுடர் நல்ல தொழில் செய்து நன்றாக சம்பாதித்து வந்தார் என்றால் சரியல்ல. என்னையும் என் தம்பியை யும் என் அக்கா ருக்மணியையும் அவர்தான் படிக்க வைத்தாரென்றால் சரியல்ல. 8-ம் வகுப்பு வரை என் பாட்டிதான் என்னை படிக்க வைத்தார். என் தந்தை படிக்கவைக்கவில்லையென வழக்கிற்கா பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நஞ்சுண்ட கவுடர் என் அப்பாவின் அப்பா. என் தாத்தாவின் மூலமாக என் அப்பாவிற்கு பாகம் வந்ததா என்றால் பாகம் பிரிக்கவில்லை. கோவிந்தப்ப கவுடரின் சொத்து யாருக்கு போனதென்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/- பெ.க. சிவக்குமார்
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.